அனுப்புநர்

திரு.சா.சேதுராம வர்மா,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

பெறுநர்

செய்தி ஆசிரியர்/
அனைத்து ஊடகங்கள்.

ந.க.எண். 019054 / டி /2021 நாள் : 08.12.2021

ஐயா/அம்மையீர்,

பொருள் : அரசுத் தேர்வுகள் இயகக்கம், சென்னை – 6 – டிசம்பர் 2021 – புதிய தேர்வுக்கால அட்டவணை மற்றும் புதிய தேர்வுக்கூட நுழைவுச்சீட்டு பதிவிறக்கம் செய்தல் குறித்த வானொலி / தொலைக்காட்சிகளில் அறிவிக்கவும் நாளிதழ்களில் செய்திக் குறிப்பாக வெளியிடக் கோருதல் – சார்பு

******

08.11.2021 முதல் 12.11.2021 வரை நடைபெறவிருந்த தனித்தேர்வர்களுக்கான எட்டாம் வகுப்பு பொதுத்தேர்வு கனமழை காரணமாக ஒத்திவைக்கப்பட்டது. புதிய தேர்வுக்கால அட்டவணை (20.12.2021 முதல் 24.12.2021 வரை) மற்றும் தேர்வுக்கூட நுழைவுச்சீட்டு பதிவிறக்கம் செய்தல் குறித்த விவரம் இத்துடன் இணைத்தனுப்பப்படுகிறது.

பொதுமக்களின் நலன்கருதி மேற்படி தகவல்களை அனைத்து மாவட்டங்களிலும் இதனை வானொலியில் / தொலைக்காட்சிகளில் / பத்திரிகையில் செய்தியாக ஒலி / ஒளி பரப்புமாறும் / வெளியிடுமாறும் கனிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இது **“விளம்பரம் அல்ல ”** என தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒம்/–
இயக்குநர்

இணைப்பு
செய்திக்குறிப்பு

## தமிழ்நாடு அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6
## தனித் தேர்வர்களுக்கான எட்டாம் வகுப்பு பொதுத் தேர்வு

## டிசம்பர்– 2021

### தேர்வுக்கால அட்டவணை

| தேதி | கிழமை | நேரம் | பாடம் |
|---|---|---|---|
| 20.12.2021 | திங்கள் | காலை 10 மணி முதல் 12 மணி வரை | தமிழ் |
| 21.12.2021 | செவ்வாய் | காலை 10 மணி முதல் 12 மணி வரை | ஆங்கிலம் |
| 22.12.2021 | புதன் | காலை 10 மணி முதல் 12 மணி வரை | கணிதம் |
| 23.12.2021 | வியாழன் | காலை 10 மணி முதல் 12 மணி வரை | அறிவியல் |
| 24.12.2021 | வெள்ளி | காலை 10 மணி முதல் 12 மணி வரை | சமூக அறிவியல் |

**தேர்வுக்கூட நுழைவுச்சீட்டு பதிவிறக்கம் செய்தல்:**

தனித்தேர்வர்களுக்கான எட்டாம் வகுப்பு பொதுத்தேர்விற்கு விண்ணப்பித்த தேர்வர்கள் புதிய தேர்வுக்கால அட்டவணையின்படி ( தேர்வுக்கூட அனுமதிச்சீட்டுக்களை **14.12.2021** முதல் www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**பதிவிறக்கம் செய்யும் முறை:**

மேற்குறிப்பிட்ட இணையதளத்தில் HALL TICKET–என்ற வாசகத்தை CLICK செய்தால் "ESLC DECEMBER 2021 EXAMINATION - CANDIDATE HALL TICKET DOWNLOAD" என்ற தலைப்பின்கீழ் உள்ள DOWNLOAD என்ற வாசகத்தினை CLICK செய்து தோன்றும் பக்கத்தில் தங்களது விண்ணப்ப எண் (Application Number) மற்றும் பிறந்த தேதியை (Date of Birth) பதிவு செய்தால் தேர்வுக்கூட அனுமதிச்சீட்டு திரையில் தோன்றும். அதனை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

ஒம்/–
**இயக்குநர்**

**இடம்:** சென்னை–6

**நாள்:** 08.12.2021